அரசறிவியல்

கற்றல் வழிகாட்டி

அரசறிவியலின் தோற்றம், அரசியல் ஆய்வு மற்றும் அணுகுமுறைகள்

அலகு: 01

(எளிய மொழிநடையில் மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது)

தொகுப்பாக்கம்:

R. அஹமட் அஹ்சன்

B.A (Hons) Special (R)

இந்நூல் பற்றி.....

2017ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப கா.பொ.த. உயர்தர அரசறிவியல் மாணவர்களின் நலனை கருத்திற் கொண்டு அரசறிவியல் கற்றல் வழிகாட்டி எனும் இந்நூலானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்று தேசிய , சர்வதேச மட்டங்களில் கற்பிக்கப்படுகின்ற பிரதான பாடமாக அரசறிவியல் விளங்குகின்றது.

அரசறிவியல் கற்கையானது சுமார் 25 நூற்றாண்டு காலமாக வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு கற்கை நெறியாகும். கிரேக்க காலத்தில் ஆரம்பமாகிய இக்கற்கை நெறி இற்றை வரை பல்வேறு அம்சங்களை உள்வாங்கி வளர்ச்சியடைந்து வருகின்றது. இக்கற்கை நெறியில் உள்வாங்கப்படும் அம்சங்கள் பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையிலும் , அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் விபரிக்கப்பட்டுள்ளன. இதுவே இக்கற்கை நெறியினை கற்பதிலுள்ள சிறப்பம்சமாகும்

அந்த வகையில் இந்நூலானது அரசறிவியலின் தோற்றம் , அரசியல் ஆய்வு மற்றும் மற்றும் அரசியலை கற்பதற்கான அணுகுமுறைகள் சம்பந்தமாக ஆராய்கின்றது. இவ்வம்சங்கள் மாணவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவான முறையில் வழங்கப்பட்டுள்ளன.

நான் இச்சிறிய நூலை எழுத துணையாக இருந்த வல்ல நாயகன் அல்லாஹ்வுக்கே முதற்கண் எல்லாப் புகழும். அல்ஹம்துலில்லாஹ். அரசறிவியல் துறையை தெரிவு செய்து அதில் மிக்க ஆர்வமாக இருப்பதற்கு பின்புலமாக இருந்த எனது அரசறிவியல் ஆசான் இளம் ஆசிரியர் B.m.சப்ரி (sir) அவர்களுக்கும் பல்கலைக்கழத்தில் அரசறிவியலை சிறப்பாக போதிக்கும் பெரும் மதிப்பிற்குரிய துறைத் தலைவர் , சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எம்.பாஸில்(sir) அவர்களுக்கும் , மதிப்பிற்குரிய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் (sir) அவர்களுக்கும் , ஒரு சிறந்த அரசியல் விஞ்ஞான ஆசான் , சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். பௌசர் (sir) அவர்களுக்கும் மற்றும் அனைத்து எனது சகோதர உள்ளங்களுக்கும் வல்ல இறைவன் அல்லாஹ் அருள்பாளிப்பானாக! ஆமின்.

அரசறிவியலை கற்போம் : கற்பிப்போம் : கற்பதற்கு துணைபுரிவோம்.

R. Ahamed Ahzan (*SEUSL)*

அரசறிவியலை விளங்கிக் கொள்ளல்

அனைத்து மனிதர்களினதும் வாழ்வில் பிரதான அங்கம் வகிக்கும் அரசியலை பயிலும் துறையே அரசறிவியல் எனலாம் .இது பரந்த கருத்தை கொண்ட ஒரு எண்ணக்கருவாகும்.

இது நீண்ட கால வரலாற்றை கொண்ட கற்கை நெறியாகும். **கி.மு. 4ம் நூற்றாண்டில்** கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் **பிளேட்டோவின் அகடமி** , **அரிஸ்டோடிலின் லைசியம்** ஆகிய கல்விக் கூடங்களில் அரசியல் என்ற பெயரில் ஆரம்பாகிய இப்பாடம் இன்று அரசறிவியல் , அரசியல் விஞ்ஞானம் ஆகிய பெயர்களில் பாடசாலை பல்கலைக்கழக மட்டங்களில் போதிக்கப்படுகின்றது. பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகிய தத்துவஞானிகளே இக்கற்கை நெறிக்கான அடித்தளத்தை இட்டனர்.

அரசறிவியல் கற்கை நெறியானது பல்வேறு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அவையாவன:

1. ஆய்வு செய்தல்
2. விபரித்தல்
3. விமர்சனத்திற்குட்படுத்தல்
4. பிரேரனைகளை முன்வைத்தல்
5. பிரஜைகளுக்கு அரசியல் அறிவூட்டுதல்
6. புதிய கோட்பாடு எண்ணக்கருக்களை உருவாக்கல்.

இவ்வாறான விடயங்களே அன்றைய அகடமி, லைசியம் போன்ற கல்விக்கூடங்களிலும் இன்றைய பல்கலைக்கழகங்ளிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசறிவியல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வதற்கு சில பிரதான விடயங்கள் காணப்படுகின்றன.

1. அரசறிவியல் ஒரு புராதன கற்கை நெறியாகும். இது கி.மு 4ம் நூற்றாண்டு கிரேக்க காலப்பகுதியில் மெய்யியல், கணிதம், தர்க்கவியல, ஒழுக்கவியல், அழகியல் ஆகிய துறைகளுக்கு இணையாக ஆரம்பமாகியது.

2.அரசறிவியலின் இயல்பு ,பாடப்பரப்பு, உள்ளடக்கம், விதிமுறைகள் ,கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் விருத்தியடைந்து **25 நூற்றாண்டு காலமாக** கட்டியெழுப்பப்பட்டு மாற்றமடைந்து , அபிவிருத்தியடைந்து வருகின்றது.

3. அரசறிவியல் அணுகுமுறைகள், கோட்பாடுகள், விதிமுறைகள் தொடர்பாக காணப்படும் பன்மைத்துவமே இக்கற்கையினை கற்பதில் உள்ள சிறப்பம்சமாகும்

அரசறிவியல் கற்றை நெறியானது

அரசியல் , **அரசறிவியல்** ஆகிய இரு பிரதான கருத்தியல்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

அரசியல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளல்

அரசியல் என்றால் என்ன என்பதற்கு பொதுவாக கிடைக்கும் வரைவிலக்கணம் தேசத்தை ஆட்சி புரிதல் என்பதாகும். இது முழுமையான வரைவிலக்கணம் கிடையாது. பிரசித்தமான , பயன்பாட்டிலுள்ள, வாய் மொழி ரீதியாக கட்டியெழுப்பப்பட்ட வரைவிலக்கணமாகும்

அரசியல் என்பதற்கு கல்வி சார் நோக்கில் இரு பிரதான வரைவிலக்கணங்கள் வழங்கப்படுகின்றன. அவையாவன :

1. அரசு, அரச நிருவாகம் , அரசாட்சி பற்றிய அடிப்படை எண்ணக்கரு
2. அரசுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல்லாமல் அரசுக்கு வெளியில் பிரஜைகள் பங்குபற்றும் சமூகப்பயன்பாடு.

அரசு, அரச நிருவாகம், அரசாட்சி பற்றிய அடிப்படை எண்ணக்கரு -- புராதன கிரேக்கத்திலும் இந்தியா மற்றும் சீன தத்துவவியலாளலர்களும் அரச மற்றும் அரச அதிகாரத்தோடு தொடர்புபடுத்தியே தமது வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளனர்

அரசியல் என்பதை குறிக்கும் politics எனும் பதமானது politikos எனும் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். **பொலிடிகோஸ் என்பது நகர அரசாகும்**. இதன் படி அரசறிவியல் என்பது நகர அரசு தொடர்பான விடயங்களை ஆராயும் கலையாகவே கருதப்பட்டது.

நகர அரசு தொடர்பான பாடப்பரப்பிற்குள் பின்வரும் விடயங்கள் உள்வாங்கப்பட்டன.

1. அரசின் தோற்றம்
2. அரசின் நோக்கம்
3. அரச ஆட்சி முறைகள்
4. அரசு மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்புகள்
5. ஆட்சியாளர்களின் குணாம்சங்கள் மற்றும் திறன்கள்
6. அரசாட்சி செயன் முறைகள்

புராதன **இந்திய** மற்றும் சீனாவில் அரசியல் என்ற பதம் இவ்வர்த்தத்திலேயே பார்க்கப்பட்டதாக **கௌடில்லியர்** , **கொன்பியூஸியஸ்** போன்ற சிந்தனையாளர்கள் தமது நூல்களில் கூறியுள்ளனர்.

அரிஸ்டோட்டிலும் கூட அரசாட்சி தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதே அரசியல் வல்லுனர்களின் கருமமொன்றாக இருந்தது என குறிப்பிட்டுள்ளார்

அரசுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அரசுக்கு வெளியே பிரஜைகள் பங்குபற்றும் செயற்பாடு : அதாவது அரசு, அரசாங்கம், அரச நிருவாகம், என்பவற்றுக்கு அப்பால் அரசுக்கு வெளியே சமூக பிரஜைகளுக்கிடையே காணப்படும் நடைமுறை என்பதே இதன் பொருளாகும்.

ஆட்சியாளர்கள் மற்றும் அரசியலை ஒரு தொழிலாக செய்யும் அரசியல் வாதிகளும் மட்டுமன்றி பிரஜைகளும் அரசியல் செய்கின்றனர் என குறிப்பிடப்படுகின்றது. கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவக்கைகள், வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், சுயாதீன சங்கங்கள் முலம் . பொதுத்தேவைகளை நிறைவேற்றும் ஊடகங்கள் என்பவற்றின் மூலம் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்

அரசியல் என்பதற்கு கிரேக்க நகர அரசினை மையப்படுத்தி கருத்து வழங்கியுள்ளனர். இது இரண்டு அர்த்தங்களை கொண்டுள்ளது.

1. அரசு மற்றும் அரசாட்சியோடு தொடர்பான விடயம்
2. அரச செயற்பாடுகள் தொடர்பில் பிரஜைகளின் கடமைகளினதும் பொறுப்புக்களினதும் செயற்பாட்டுத்தனம

கிரேக்கத்தில் அரசியலில் பிரஜைகளின் நேரடி பங்குபற்றுதல் காணப்பட்டது . இதனையே **அரிஸ்டோட்டில் செயற்பாட்டுப் பிரஜை** எனும் பதத்தின் மூலம் விளக்கியுள்ளார்

இதன்படி பிரஜைகளின் செயற்பாடுகள் மற்றும் அரசியல் பங்குபற்றுதல் இன்றி அரசியல் என்பது எண்ணிப்பார்க்க முடியாததாகும்

அரசியலுக்கும் அரசறிவியலுக்குமிடையிலான தொடர்புகள், வேறுபாடுகள்

அரசியலும் அரசறிவியலும் இரண்டு வகையில் தொடர்புபடுகின்றன.

1. அரசியல் செய்தல்
2. அரசியலை கற்றல்

அரசியல் செய்தல் என்பது அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ளல் , அதனை நடைமுறைப்படுத்தல், தேர்தலில் பங்கேற்றல் ,அரசியல் கட்சிகளின் செற்பாடுகளில் பங்குபற்றல், போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களில் பங்குபற்றல் போன்ற நடவடிக்கைகளை குறிக்கின்றது.

ஒருவர் அரசியலில் ஈடுபடுவதற்கு கல்விசார் அறிவு, சிறப்பு தேர்ச்சி தேவையில்லை . அரசியலில் ஈடுபட விருப்பமும் தியாகம் மற்றும் திடசங்கற்பம் இருந்தால் காணும்.

அரசியலை கற்றல் என்பது அரசியல் செய்வதிலும் பார்க்க வேறுபட்டது. **அரசியலை கற்போர் அரசியலை கற்கும் மாணவர்** என அடையாளப்படுத்தப்படுவர். இம் மாணவர்கள் அரசியல் செய்யும் ஒருவராக அடையாளம் காணப்படுவதில்லை. தினந்தோறும் நடைமுறையில் செய்யப்படும் இம் மாற்றம் அரசியல் மற்றும் அரசறிவியலுக்கிடையில் காணப்படும் தொடர்புகளை இணங்கான துணைபுரியும்

கல்வி துறையாக அரசியலை கற்றல் , பிரயோக அரசியலில் ஈடுபடல் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டது. அரசியலை கல்வியாக கற்றல் என்பதே அரசறிவியல் ஆகும். இதன்படி அரசறிவியலில் கற்பிக்கப்படும் விடயங்கள்:

1. அரசியல் கட்சிகளது , அமைப்புக்களது செயற்பாடுகள்,
2. அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதில் அரசியல் கட்சிகளுக்குமிடையிலும் இயக்கங்களுக்கிடையிலும் ஏற்படும் போட்டி
3. தேர்தல் செயநற்பாடுகள்
4. வாக்காளர் நடத்தை
5. தொழில் சார் அரசியல் வாதிகளின் நடத்தை
6. யுத்தம் மற்றும் சமாதானம்
7. அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகள்
8. கோள்கை உருவாக்க அமுலாக்க செயற்பாடுகள்
9. சர்வதேச தொடர்புகளும் மோதல்களும்
10. அரசியல் மோதல்கள் , எதிர்ப்புக்கள் முரண்பாடுகள்

இவ்வாறு அரசியல் மற்றும் அரசறிவியலுக்கிடையில் தொடர்புகள் இருப்பது போல வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

01.கோட்பாடு மற்றும் நடைமுறைத்தளத்தின் அடிப்படையிலான வேறுபாடு:

கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியாக அரசியல் மற்றும் அரசறிவியல் என்பன வேறுபடுவதனை அவதானிக்கலாம். அதாவது அரசியலை எடுத்துக் கொண்டால் இதன் செயற்பாடுகள் நடைமுறை ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக தேர்தல்செயன்முறை, பாராளுமன்ற செயற்படுகள், அரசியல் கட்சிகளினுடைய நடவடிக்கைகள் என்பவற்றை குறிப்பிடலாம்

ஆனால் அரசறிவியலானது அரசியலில் முதன்மை பெறுகின்ற அரசு, அரசாங்கம், அதிகாரம் போன்ற தகவல்களினை வழங்கக்கூடிய ஒரு கற்கை வடிவமாகும். இது தாராண்மைவாதம் , சோசலிச வாதம், பாசிசம், பெண்ணியல் வாதம் போன்ற கோட்பாட்டு வடிவிலான அறிவியலினை வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியாக அரசியல் மற்றும் அரசறிவியல் வேறுபடுவதனை அவதானிக்கலாம்.

02. அரசியல்வாதிக்கும் அரசறிவியலாளனுக்குமிடையிலான வேறுபாடு :

அரசியல்வாதிகளுக்கும் அரசறிவியலாலளர்களுக்குமிடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்வதன் மூலம் அரசியலுக்கும் அரசறிவியலுக்குமிடையிலான வேறுபாட்டை இணங்கண்டு கொள்ளலாம். அரசியல்வாதிகள் என்போர் தேர்தல், கட்சி. அதிகாரம் எனும் அடிப்படையில் தமது கடமைகளை முன்னெடுக்கின்ற அரசியல் செயன்முறை வடிவங்களில் மிக்க ஈடுபாட்டுடனும் தேர்ச்சியுடனும் மேற்கொள்கின்ற நபர்களாவர். இவர்களின் மூலமும் இவர்கள் சார்ந்து இருக்கின்ற கட்சிகள் மூலமும் அரசு மற்றும் அரசாங்க செயற்பாடுகள் நடைமுறை வடிவத்தை பெறுகின்றன. இவர்களுக்கு அரசியலில் ஈடுபட அரசறிவியல் அறிவு என்பது அவசியம் என்பது கிடையாது. முறாக தன்னம்பிக்கை , தைரியம் இருந்தால் காணும்.

ஆனால் அரசறிவியலாளன் என்போர் அரசறிவியலில் புலமை மிக்க , நிபுணத்துவமிக்க நபர்களை குறிக்கும். இவர்கள் தான் அரசியல் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்குறிய ஏற்பாடுகளுக்கும் வடிவம் கொடுக்கின்றனர். ஒரு அரசறிவியலாளன் அரசியல்வாதியாக மாறலாம், ஆனால் அரசியல்வாதி அரசறிவியலனாக இருக்க வேண்டும் என அவசியமில்லை. எனவே இதனடிப்படையில் அரசியலும், அரசறிவியலும் வேறுபடுகின்றது.

03.அதிகாரமும் அதிகார பிரயோக செயன்முறையாகும்.

அதிகாரம் மற்றும் அதிகார பிரயோக செயன்முறை அடிப்படையில் அரசியலும் அரசறிவியலும் வேறுபடுகின்றமையை அவதானிக்கலாம்.அரசியலின் மைய அம்சமாகிய அரசு மற்றும் அரசாங்கத்தினது இயக்கத்திற்கு அதிகாரம் அவசியமாகும். இதனை கைப்பற்றவே அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் செயற்படுகின்றன. இதனாலேயே ஹான்ஸ் ஜே. மோகன்தோ எல்லா அரசியல் செயற்பாடுகளும் அதிகாரத்தினை மையப்படுத்தியது என குறிப்பிடுகின்றார். எனவே அதிகார நடைமுறை வடிவமே அரசியல் எனலாம்.

மாறாக அரசறிவியலானது அதிகாரம் என்றால் என்ன, அதன் பிரயோக எல்லைகள், அதிகார வகைகள் பற்றி மக்கியவல்லி, பேட்ரன் ரசல் ஜோன் ஒஸ்ரின் போன்ற பல அறிஞர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளது. மக்கியவல்லியின் இளவரசன் எனும் நூலில் அதிகார கோட்பாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.இவ்வகையான அதிகாரமே நடைமுறையில் பயன்படுத்தப்படுவதற்கும் அடிப்படையாக உள்ளது. எனவே இதன் அடிப்படையில் அரசியலும் அரசறிவியலும் வேறுபடுவதனை அவதானிக்கலாம்.

04. மோதல் செயன்முறையும் அதுசார் தீர்வு முயற்சிகளும்

மோதலும் மோதல் தீர்வு செயன்முறை என்பன தற்கால உலகில் பிரபல்யம் பெற்றுக் காணப்படுகின்ற இரு விடயங்களாகும். இதனடிப்படையில் அரசியலும் அரசறிவியலும் வேறுபடுகின்றது. தேசிய , இன ரீதியான மோதல்களை இணங்கண்டு தீர்ப்பதற்குரிய நடவடிக்கைளை அரசியவ்வாதிகள் மேற்கொள்கின்றார்கள் .அதே சமயம் 3ம் உலக நாடுகளில் மோதல்களை நிகழ்த்துவதும், அதனை தூண்டிவிடுவதும் அரசியல்வாதிகள்தான். அரசியல்வாதிகள்தான். எனவே ஒரு பிரதேசத்தில் நடைபெறும் மோதலுக்கும் அது சார்த தீர்வு முயற்சிகளுக்கும் அப்பிரதேச அரசியலே காரணம் எனலாம். இதற்கமைய அரசியலும் அரசறிவியலும் வேறுபடுகின்றமையை அவதானிக்கலாம்.

05. சர்வதேச அரசுகளும் சர்வதேச அரசியல் செயற்பாடுகளும்

மேற்குறிப்பிட்ட அம்சமானது அரசியலையும் அரசறிவியலினையும் வேறுபடுத்துகின்றது. குறிப்பாக இன்று ஒவ்வொறு அரசுகளுக்கும் சர்வதேச அரசுகள் சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகும். இதனை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அரசியல் செயற்பாடுகளும் முதன்மைமிக்கதாகும். இதற்கு அரசியல் வாதிகளினதும் , அரசியல் கட்சிகளினது பங்களிப்பு முக்கியமானதாகும்.இந்த செயற்பாடுகளை சர்வதேச அரசியல் செயற்பாடுகள் எனலாம். இச் சர்வதேச அரசியலானாது ஒரு கற்கை பிரிவாக அரசறிவியலில் கற்பிக்கப்படுகின்றது. அதாவது சர்வதேச அரசு முறைகள், அரசியல் யாப்பு கட்டமைப்புக்கள், ஐ.நா.சபை, சர்வதேச செஞ்சிலுவை சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புகள் பற்றியும் கற்பதனை குறிப்பிடலாம். இதனூடாக அரசியலும் அரசறிவியலும் வேறுபடுகின்றமையை அவதானிக்கலாம்

இவ்வாறு அரசியலும் அரசறிவியலும் வேறுபடுவதனை அவதானிக்கலாம். எனினும் இவை ஒன்றிலிருந்து ஒன்று தவிர்க்க முடியாததாகும்.அதாவது அரசறிவியலினூடாக நடைமுறை அரசியல் அம்சங்களை புரிந்து கொள்ளும் அதேவேளை இந்நடைமுறை அம்சங்களே எதிர்கால அரசியல் பாடப்பரப்புக்களாக மாற்றம் பெறுகின்றன எனலாம்.

அரசியலை கல்வியாக கற்றல்

அரசியலை கற்றல் என்பதில் என்பதில் இரு அர்த்தங்கள் உள்ளன.

1. கல்வி துறையாக கற்றல்
2. அரசியலை ஒரு நடைமுறை அறிவு என்ற வகையில் கற்றல்

கல்வி துறையாக கற்றல் :

இதன் பொருள் யாதெனில் ஓர் அரசியல் தோற்றப்பாட்டினை அல்லது பிரச்சினையை விஞ்ஞான முறையில் கற்றலாகும்.. அதாவது பாடசாலை , பல்கலைக்கழகம் . சட்டக் கல்லூரி மற்றும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் கல்வி வேலைத்திட்டங்கள், முறையாகவும் கோட்பாட்டு அணுகுமுறையினூடாகவும் வழிப்படுத்தப்பட்டு முறையாக திரட்டப்பட்ட தரவுகள், தகவல்கள், சான்றுகள் என்பவற்றின் அடிப்படையில் கற்றலாகும்

அரசியலை ஒரு நடைமுறை என்ற வகையில் கற்றல்

அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் மூலம் முறைசாரா வழிமுறைகளில் அரசியலை கற்பதை குறிக்கின்றது. அதாவது நாம் அன்றாட வாழ்க்கையில் குடும்பம் , நண்பர்கள், அரசியல் கட்சிகள் போன்ற பல்வேறு வழிமுறைகள் மூலம் பெறும் அறிவை குறிக்கின்றது.

இவற்றை சற்று சுருக்கமாக நோக்கலாம்.

1. குடும்பம்

மனிதன் அரசியல் பற்றி அறிந்து கொள்கின்ற முதலாவது இடம் குடும்பமாகும். குடும்பத்தில் பெற்றோர்கள், உறவினர்கள், முதியோர்கள் போன்றவர்களிடையே இடம் பெறும் கலந்துரையாடல்கள் மூலம் அரசியல் பற்றி அறிந்து கொள்கிறான். இக் கருத்துக்கள் சில வேளை அவன் வாழ்க்கை முழுவதும் நீடித்திருப்பதுண்டு.

2. நண்பர்குழாம்

ஒரு மனிதன் தனது நண்பர்களை பாடசாலையிலும் தான் தொழில் புரியும் இடங்களிலும் பெற்றுக் கொள்கிறான். இவர்கள் தங்களிடையே கலந்துரையாடுவதன் மூலம் அரசியல் பற்றிய விழிப்புணர்வும் , அறிவும் பெறப்படுகின்றன.

3. சமய நிறுவனங்கள்

மனிதர்களுடைய அரசியல் அறிவுகளும் செயற்பாடுகளும் ஒழுங்கமைவதில் சமய நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு மனிதனுக்கும் சமய நிறுவனத்திற்குமிடையிலான தொடர்பின் அடிப்படையில் சமய நிறுவனங்களின் பாதிப்பு தங்கியிருக்கும்.

4. ஊடகங்கள் :

இன்று மனிதர்கள் அரசியல் அறிவை பெற்றுக் கொள்வதில் ஊடகங்களின் பங்கு முக்கியமானதாகும். ஊடகங்கள் எனும் போது பத்திரிகைகள் தொலைக்காட்சி , வானொலி, இணையம், சமூக வலைத்தளங்கள் போன்றன உள்வாங்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் சிறுவயதிலிருந்தே ஊடகங்களுடன் பிணைக்கப்படுகின்றான். இவை மக்களுக்கு அரசியல் தகவல்களை வழங்குவதால் அவர்களின் அறிவு வித்தியடைகின்றது. எனினும் சில ஊடகங்கள் பிழையான சமூகமயமாக்கலை ஏற்படுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது

5. அரசியல் கட்சிகள்

அரசியல் கட்சிகளும் மனிதர்களுக்கு அரசியல் அறிவை ஏற்படுத்துகின்றன. மேடைப்பேச்சுக்கள் ,பிரச்சாரங்கள் , கட்சி மாநாடுகள், அமைதியான போராட்டங்கள் , ஊர்வலங்கள் மூலம் அரசியல் பற்றிய அறிவை மனிதன் பெற்றுக் கொள்கின்றான்.

6. அரசாங்கம்

மனிதர்களுக்கு அரசியல் அறிவை ஏறுபடுத்துவதில் அரசாங்கத்தின் பங்கும் முக்கியமானதாகும். ஆரசாங்கம் தாம் மேற்கொள்கின்ற அபிவிருத்தி திட்டங்கள் மூலம் அரசியல் பற்றிய தகவல்களை மக்களுக்கு வழங்குகின்றன.

7. பொருளாதார காரணிகள்

8. அபிப்பிராயத் தலைவர்கள்

அரசியல் கற்கையும் அதன் பகுதிகளும்

அரசியல் கற்கையானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அபிவிருத்தியடைந்த ஒரு துறையாகவும் ஒரு பாடமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சியின் போது அரசியல் கற்கையின் விடயப்பரப்பு, அணுகுமுறைகள், விதி முறைகள், செய்முறைகள் என விருத்தியடைந்துள்ளது.

அரசியலை ஒரு கற்கைத்துறையாக கற்கப்படுகின்ற போது அது சமூக வாழ்வின் பல்வேறு பிரிவுகளில் காணப்படுகின்றது. அவையாவன :

1. அரசியல் நிறுவனங்கள்
2. அரசியல் நடைமுறைகள்
3. அரசாட்சி
4. அரசியல் நடத்தை
5. அரசியல் கருத்தியல்கள

அரசியல் நிறுவனங்கள் :

அரசு மற்றும் அரசாங்க செயற்பாடுகளை மேற்கொள்கின்ற ,அவற்றை தீர்மானிப்பதாக காணப்படுகின்ற அமைப்புக்கள் அரசியல் நிறுவனங்கள் எனப்படும். இவற்றின் ஆரம்பம், வளர்ச்சி,அமைவுச் சேர்க்கை, பொறுப்புக்கள், நிலைமாற்றங்கள், வேறுபாடுகள், அந்நிறுவனங்களுக்கும் பிரஜைகளுக்குமிடையிலான தொடர்பைக் கற்றல் இதற்குள் உள்ளடங்கும்

அரசியல் நிறுவனங்கள் சில : அரசு , அரசாங்கம் . புணிக்குழு, அமைச்சரவை , நீதித்துறை, பாராளுமன்றம் ,: உள்ளுராட்சி மன்றங்கள்.

அரசியல் நடைமுறைகள் :

ஊகத்தை மையமாகக் கொண்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியல் சமூகத்தின் நிலைப்புத்தன்மை அரசியல் நடைமுறைகள் ஆகும்.

பாராளுமன்ற இருப்புக்கான நடைமுறைகளாக ஜனநாயகம், தேர்தல் செயன் முறை, சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள்,, பெரும்பான்மையினரின் விருப்பம், மக்கள் இறைமையை ஏற்றுக் கொள்ளல் என்பவற்றை கற்றல் ஆகும்.

அரசாட்சி (ஆட்சி)

அரசாட்சி என்பது அரசியல் கற்கையின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும்.

ஆட்சி செயன் முறையில் உள்ளடங்கும் பணிகள் :

1. சமூகத்தின் சிறப்பான இருப்பிற்கும் மோதல்களை தீர்ப்பதற்கும் சட்டங்களை ஆக்குதல்
2. அரச கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அவசியமான பொதுத்துறை நிர்வாகப் பணிகள்
3. நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை முகாமை செய்தலும் பேணிச் செல்லலும்
4. நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கொள்கைகளை உருவாக்கலும் அவற்றை அமுலாக்கலும்

அரசியல் கருத்தியல்கள் :

ஓர் சமூகத்தில் உள்ள அரசியல் நிறுவனங்கள் மற்றும் பிரஜைகளின் அரசியல் நடத்தைகள் , ஆட்சி செயன்முறைகள் என்பவற்றை உருவமைக்கும் காரணிகள் அரசியல் கருத்தியல்கள் எனப்படும்.

தற்கால உலகில் அரசியல் நிகழ்களையும் அரச கொள்கைகளையும் உருவமைக்கும் பல அரசியல் கருத்தியல்கள் காணப்படுகின்றன.

உதாரணங்கள் : தாரான்மைவாதம் , சமவுடமைவாதம், குடியரசு வாதம் , சமூக ஜனநாயகம், பாசிச வாதம், தேசியவாதம், மதச்சார்பின்மைவாதம், பெண்ணியல்வாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம்

அரசியல் நடத்தை :

அரசியல் நடத்தை என்பது ஒரு அரசியல் சமூகத்தில் மனிதர்களின் அரசியல் விருப்பு, வெறுப்புக்களையும செயற்பாடுகளையும் விபரிக்கும் அரசியல் எண்ணக்கருவாகும். பிரஜைகளுக்கு நவீன அரசியல் சமூகத்தில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய பணிகள் சில உள்ளன. அவை வருமாறு:

1. அரசியலில் ஈடுபடல்
2. தேர்தலில் வாக்களித்தல் அல்லது வாக்களிக்காமை
3. தேர்தல் செயற்பாடுகளில் செயற்திறனுடன் ஈடுபடல், அல்லது ஒதுங்கியிருத்தல்
4. கட்சிகளில் உறுப்பினராக இருத்தல் அல்லது இல்லாதிருத்தல்

அரசறிவியலினை கற்பதற்கான அணுகுமுறைகள்

ஒரு விடயத்தினை இலகுவாக புரிந்து கொள்வதற்கு பயன்படும் நுட்பமுறைகள் அணுகுமுறைகள் என அழைக்கப்படும். அந்த அரசறிவியலை புரிந்து கொள்வதற்காக புரிந்து கொள்வதற்காக பலவேறு விதமான அணுகுறைகள் கையாளப்பட்டன. அவற்றினை மரபு ரீதியான அணுகுமுறைகள் , நவீன அணுகுமுறைகள் என இரண்டாக பிரித்து நோக்குவர்.

அந்த அரசறிவியல் துறையில் அடையாளப்படுத்தப்படும் பிரதான அணுமுறைகளில் பின்வருவன முக்கியமானதாகும்

1. தத்துவார்த்த /நியம/ இலட்சியவாத/ மெய்யியல் அணுகுமுறை
2. ஒப்பீட்டு அணுகுமுறை
3. பல்துறை அணுகுமுறை
4. விஞ்ஞான அணுகுமுறை (நடத்தைவாதம்)
5. அரசியல் பொருளாதார அணுகுமுறை
6. அரசியல் சமூகவியல் அணுகுமுறை
7. பெண்ணியல்வாத அணுகுமுறை

தத்துவார்த்த /நியம/ இலட்சியவாத/ மெய்யியல் அணுகுமுறை

அரசறிவியலில் மிகவும் பழமையானதும், இன்று வரை பயன்படுத்தக்கூடிய அணுகுமுறை தத்துவார்த்த அணுகுமுறையாகும். தத்துவார்த்த அணுகுமுறை என்பது **அரசியலின் உண்மை நிலையன்றி கற்பனையில் உதிக்கும் அரசியல்** நிலையினை கற்பதற்கான ஆய்வியல் அணுகுமுறையே தத்துவார்த்த அணுமுறையாகும்.. இவ்வணுகுமுறையானது தத்துவங்கள் , கோட்பாடுகள் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவ்வணுகுமுறையின் பிரதான இலக்கு **இறுதி இலக்கை முதலில் தீர்மானித்துவிட்டு அதனை அடைவதற்கான இலக்குகளை பின்னர் விபரிப்பதாகும்.** இவ்வணுகுமுறையினை கையாண்ட சிந்தனையாளர்கள் வருமாறு

கிரேக்க கால சிந்தனையாளர்கள்

- ✓ பிளேட்டோ
- ✓ அரிஸ்டோட்டில்

ஐரோப்பிய சிந்தளைனயாளர்கள் 20ம் நூற்றாண்டு சிந்தனையாளர்கள்

- ✓ சிசரோ மகாத்மாகாந்தி, எனா ஏரஸ்டி, ஜோன்ரோல்ஸ், சார்ல்ஸ் டெய்லர்
- ✓ சென் ஒகஸ்டின்
- ✓ மக்கியவல்லி
- ✓ தோமஸ்மூர்
- ✓ தோமஸ் ஹொப்ஸ்
- ✓ ஜோன் லொக்
- ✓ ரூசோ
- ✓ இமானுவேல் காண்ட்
- ✓ ஹெகல்

தத்துவார்த்த அணுகுமுறையின் பண்புகள்

1. உலகம் பற்றிய அடிப்படை வினாக்களை எழுப்பி பரிசீலனை செய்தல்

   உலகம் என்பது யாது? உலகம் எவ்வாறு இருப்புக் கொண்டுள்ளது? மனித வாழ்க்கை என்பது யாது? போன்ற வினாக்களை எழுப்பி உலம் பற்றிய பரிசீலனைகளை செய்கின்றது.

2. அரசியல் சம்பந்தமான வினாக்களை எழுப்பி பரிசீலனை செய்தல்

   அரசியல் என்பது யாது? அரசு என்பது யாது? அரசின் நோக்கங்கள் யாவை? அரசுக்கு மனிதன் ஏன் அடிபணிய வேண்டும்? அரசுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பு யாது? போன்ற வினாக்களை எழுப்பி அரசியல் பற்றி ஆராய்கின்றது

3. தத்துவஞானிகள் உலகையும் அரசியலையும் விளங்கிக் கொள்வதற்கான எண்ணக்கருக்களின் பொருட்களை உறுதிப்படுத்த முயல்தல். (நீதி , நியாயம் , சமத்துவம் சுதந்திரம், உரிமைகள்)

4. அரசியலின் இலட்சிய நோக்கங்கள் மீது காட்டும் அதிக ஈடுபாடு

   இலட்சியம் என்பதன் விளக்கம் பெறுமானங்களின் முடிவுகளை உள்ளடக்கியதாகும். அதாவது உலகில் ஏற்படும் விடயங்கள் குறித்து எம்மிடம் நல்லவை , தீயவை என்ற வகையில் பெறுமானத் தீர்மானங்கள் உண்டு. அவ்வாறானவையே இலட்சியத்தீர்மானங்களாகும்

   உதாரணம் : கடும் குற்றமிழைத்த ஒருவருக்கு மரண தண்டனை அவசியமா என்பது தொடர்பில் நல்லவை அல்லது தீயவை எனும் வகையில் பெறுமானத் தீர்மானங்கள் உண்டு

5. அரசியலின் உண்மை நிலையை பற்றி எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை ஆராய்தல்

6. முன்வகுக்கப்பட்ட கோட்பாடுகளிலும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது.

நன்மைகள்

- அகநிலை நோக்கின் அடிப்படையில் விடயத்தை ஆராய்தல்
- ஒரு நிச்சயமான தளத்தில் இருந்து கொண்டு பெறுமதிகளை அடைதல்
- ஒரு விடயத்தை பெறுமானம் சார் தீர்ப்பின் அடிப்படையில் நோக்க முடிதல்

தீமைகள்

- தத்துவத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியாது
- தத்துவத்தை எளிதில் நடைமுறைப்படுத்த முடியாது
- இங்கு பகுத்தறிவு பயன்படுத்தப்படுவதில்லை
- நவீன யுகத்தில் தத்துவாரத்த முறை பொருத்தமற்றது.

ஒப்பீட்டு அணுகுமுறை

ஒப்பீடு என்பது தொடர்புபடுவதாகும். அதாவது ஒரு விடயத்தை இன்னொரு விடயத்துடன் தொடர்புபடுத்துவதை குறிக்கின்றது. ஒரு சமூக அரசியல் தோற்றப்பாற்றையோ பிரச்சினையையோ கருப்பொருளையோ பிறிதொரு நிலையுடன் ஒப்பீட்டு பார்ப்பதன் மூலம் அது பற்றிய சிறந்த அறிவை பெற்றுக் கொள்வதெ ஒப்பீட்டு அணுகுறையாகும்.

அரசியலை ஏன் ஒப்பீட்டு ரீதியல் கற்க வேண்டும்?

இது தொடர்பாக **கெனத் நியூட்டன் ஜோன் வெண்டத் என்போர் தமது ஒப்பீட்டு அரசியலின் அடிப்படைகள்** எனும் நூலில் கூறும்போது இரண்டு காரணிகளை முல்வைக்கின்றனர்

1. ஒரு நாட்டின் அரசியலை சிறப்பாக விளங்கிக்கொள்வாற்கு ஏனைய நாடுகளின் அரசியலுடன் அதனை ஒப்பிட வேண்டும்
2. ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வரலாறு பின்னணி , நிறுவனங்கள் தொடர்பாக திரட்டிக் கொள்ளும் ஒபீட்டு ரீதியான புரிதலின்றி அந்நாடுகளின் அரசிலமைப்பை சிறப்பாக புரிந்து கொள்ள முடியாது

ஒப்பீட்டு அணுகுமுறையின் வகைகள்

1. பழம் ஒப்பீட்டு அணுகுறை
2. 20ம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அணுகுமுறை
3. சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

பழம் ஒப்பீட்டு அணுகுமுறை : இது கிரேக்க, உரோம, மத்திய கால சிந்தனையில் பயன்படுத்தப்பட்ட அணுமுறையாகும். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அரிஸ்டோட்டிலின் அரசியல் எனும் நூல் அமைகின்றது. இவர் 150 க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசியல் முறைமையினை ஒப்பீடு செய்தார். இவரே ஒப்பீட்டு அரசியல் கல்வியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

20ம் நூற்றாண்டில் ஒப்பீட்டு அணுகுறை : இம் முறை 1960 களின் பின்னர் அமேரிக்க பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான ரீதியான பின்னணியில் விருத்தி கண்டது. அரசறிவியலின் செய்முறைகள் இயற்கை விஞ்ஞான செய்முறைகளை ஒத்த அணுபவம் சார் தன்மையினதாகும் என வாதிட்டது. **இங்கு அரசியல் யாப்பு , அரசியல் வரலாறு பற்றி ஒப்பீடு செய்யப்படாது**. மாறாக அனுபவம் சார் ரீதியில் அவதானிக்கக்கூடிய அரசியல் கலாசாரம் அரசியல் நடத்தை , அரசியல் சமுதாயப்படுத்தல் போன்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வேறுபட்ட அரசியல் முறைமைகளை ஒப்பீட்டு ரீதியாக கற்க முடியும்.

இம்முறையை பயன்படுத்திய அறிஞர்கள் :

- கப்ரியல் ஆல்மண்ட்
- ஜே.எஸ். கோல்மண்ட்
- எஸ். எம். லிப்சட்
- சிட்னி வெபர்
- கன்றிங்ரன்

சமகால ஒப்பீட்டு அணுகுறை : இவ்வணுகுமுறை புதிய விடயங்கள் சேரும் அளவிற்கு **நெகிழ்ச்சித்தன்மை பொருந்தியதாக காணப்படுகிறது**.

உதாரணம்

- அரசியல் நிறுவனங்கள்
- அரசியல் மாற்றங்கள்
- சமாதான செயன்முறைகள்
- மனித உரிமைகள்
- தேசிய வாத அரசியல்
- அரசியல் செயன்முறை
- பிரஜைகள் செயற்பாடு
- பெண்களின் அரசியல் பங்கேற்பு

ஒப்பீட்டு அணுகுமுறையின் நன்மைகள்

- பரந்த பாடப்பரப்பினை தேடும் திறனைத் தேடுகின்து
- இது ஒரு யதார்த்தத்திற்கான தேடலாக மாறுகின்றது
- திட்டவட்டமான தகவல் பற்றிய தேடலை ஒப்பிடுகின்றது
- அரசியல் கோட்பாட்டின் ஒழங்குமுறைக்கான ஒப்பீட்டாய்வினை மேற்கொள்ள உதவுதல்

தீமைகள் :

- ஒப்பீட்டுக்காக சேகரிக்கப்படும் தகவல்கள் பிழையாக இருப்பின் பெறப்படும் முடிவுகளும் தவறாக இருப்பதற்கு வாய்ப்புண்டு
- ஒரு நாட்டினுடைய அரசியல் கொள்கைகள் அந்நாட்டு அரசியல் , சமூக பொருளாதார சூழலுடன் தொடர்பானவை. இதனால் வெளியில் உள்ள நிறுவனங்களை ஒப்பீட்டு பெறப்படும் கொள்கைகள் பயன்படுத்தப்படும் நாட்டுக்கு பொருந்தாததாக அமையலாம்

<u>பல்துறையிடை அணுகுமுறை</u>

அரசறிவியல் கற்கையில் அரசறிவியல் .சாராத ஏனைய பாடங்களின் கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் பயன்படுத்துவதே பல்துறையிடை அணுகுமுறை எனப்படும்.

அரசறிவியல் கற்கையானது ஏனைய பாடங்களுடன் தொடர்புபட்ட வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

உதாரணம் : கிரேக்க காலம் : தத்துவம்

உரோமகாலம் : இறையியல்வாதம் , வரலாறு, சட்டவியல்

19ம் நூற்றாண்டு : பொருளியல், வரலாறு, சட்வியல்

20ம் நூற்றாண்டு : சமூகவியல் மானிடவியல் , உளவியல்

அரசறிவியலானது தனக்குரிய கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் கொண்டிருப்பினும் அவை ஏனைய பாடங்களுக்குரிய கோட்பாடுகளுடனும் எண்ணக்கருக்களோடும் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது

உதாரணங்கள் : வாக்காளர்களின் நடத்தை ,பொது அபிப்பிராயம் போன்ற ஆய்வுகள் உளவியலுடன் உதவியுடயே ஆய்வாளர்கால் மேற்கொள்ளப்படுகின்றது.

அரசியமைப்புச்சட்டம் , நிர்வாகச்சட்டம், பொதுச்சட்டம், சட்டவாட்சி போன்ற ஆய்வுகள் சட்த்தின் உதவியுடனே மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கத்திற்கும் சுதந்திரத்திற்குமிடையிலான இடையிலான உறவு தொடர்பான வினா பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே வளச்சியடைந்துள்ளன.

அரசியல் சமூகத்திலிருந்து ஏனைய அம்சங்களில் தனிமைப்பட்டு இருப்பதனாலும்

அரசியல் சமூகத்துடன் இணைந்திருப்பதனாலும்

அரசியல் சமூகத்தினால் மேலெழுந்த தோற்றப்பாடாக இருப்பதனாலும் அரசறிவியலுக்கு பன்மைத்துவ அணுகுமுறை தேவைப்படுகின்றது.

நன்மைகள்

இவ்வணுகுமுறையின் ஆய்வு நுட்பங்களை தழுவுவதால் அரசறிவியல் ஆய்வுகள் முழுமை பெறுகின்றன.

பன்மைத்துவ ஆய்வுகளால் அரசறிவியல் காலத்துடன் சேர்ந்து பயணிக்கும் நவ தன்மையை பெறுதல்

சமூக கலாச்சார பண்புகள் அரசியல் கலாச்சார பொறிமுறைத்தளங்களுக்கு தாங்கு திறனைக் கொடுப்பதால் நவீன அரசியல் அபிவிருத்தி பாங்கிற்கு அட்டுச் செல்கின்றது.

தீமைகள்

அரசறிவியலின் தனித்துவம் இழக்கப்படல்

சமகால அரசியல் சமுகத்தில் காணப்படும் குழப்பங்களும் அரசியல் எண்ணக்கருக்களாக வளர்ச்சியடைய முற்படுதல்

அரசறிவியலின் யாப்பு போன்ற அம்சங்களில் மொழி, மத விடயங்கள் பொறிமுறைகளை செயலிழக்கச் செய்யும்

விஞ்ஞான ரீதியான அணுகுறை

அரசறிவியலானது விஞ்ஞான ரீதியான கூறுகளை உள்ளடக்கிய ஒரு பாடப்பிரிவாக காணப்படுவாதால் அதன் அணுமுறைகளுள் விஞ்ஞான ரிதியான அணுகுமுறை முக்கியமான ஒன்றாகும். 1930, 1940 களில் அமேரிக்க அரசியல் விஞ்ஞானிகளால் உயிரியல் விஞ்ஞான முறையில் பயன்படுத்தப்பட்ட அணுகுமுறைகள் அரசறிவியலிலும் பயன்படுத்தப்பட்டது. இவை அனுபவம் மற்றும் செயன்முறை சார்ந்ததாக காணப்பட்டது. அரசியலிலும் உள்வாங்கப்பட்டதன் பின்னரே அது அரசியல் விஞ்ஞானமாக மாற்றடைந்தது. இத்தகைய **விஞ்ஞான அணுகுமுறைகளுக்கு உதாரணமாக நடத்தைவாதம் , முறைசார் பகுப்பாய்வு, முறைசார் அணுகுமுறை என்பவற்றை கூறமுடியும்**.

விஞ்ஞான அணுகுமுறையானது பின்வரும் மூலக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது

1. அனுபவ ரீதியிலான ஆய்வு
2. புற நிலை சார்ந்த ஆய்வு
3. பெறுமானம் சார் தீர்ப்பிலிருந்து விடுபட்ட ஆய்வு

நடத்தைவாத அணுகுமுறை

அரசறிவியலில் பயன்படுத்துகின்ற விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகளுள் நடத்தைவாத அணுகுமுறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். **நடத்தைவாதம் என்பது அரசியலில் ஈடுபடும் மனிதனினதும் மனித குழுக்களினதும் அரசியல் நடத்தைகளை விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்து அதனை விளக்கும் ஆய்வு முறையாகும்**

இவ்வணுகுமுறையானது 2ம் நூற்றாண்டின் முதலரைப்பகுதியில் அமேரிக்காவில் அறிமுகமாகி 2ம் உலகப் போரின் பின்னர் அரசறிவியலில் பிரபல்யமான ஒரு முறையாக மாறியது. இந்நடத்தைவாதத்தின் எழுச்சிக்கு சார்ள்ஸ் ஈமெரியம், டேவிட் ஈஸ்டன், ஹரோல்ட் லாஸ்வெல், கப்ரியல் ஆல்மண்ட், டேவிட் ஆப்டர் ,டேவிட் ரூமன், ரொபட் ஏ. டால் போன்ற அறிஞர்கள் பங்களிப்புச் செய்தனர்

மரபு ரீதியான அணுகுமுறைகளில் காணப்பட்ட குறைபாடே இவ்வணுகுமுறையின் தோற்றத்திற்கு பிரதான காரணமாக அமைந்தது. இந்நடத்தைவாதத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அரசியல் பாடப்பரப்பில் ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தியிருந்தது.

நடத்தைவாதத்தின் பண்புகள்

1. ஆய்வுக்குரிய பொருள்

நடத்தைவாதமானது சிற்றின விடயங்களை ஆராய்கின்றது. அதாவது அரசியல் சமூகத்தில் இடம்பெறுகின்ற மானவர் போராட்டங்கள், தேர்தல் நடத்தைகள், வகுப்புவாதப் போராட்டங்கள் அரசியல் வன்செயல் போன்ற சிற்றின விடயங்களேயே ஆய்வு செய்கின்றது. மாறாக இது மரபு ரீதியான அணுகுமுறைகளைப் போல அரசு, அரசாங்கம், இறைமை போன்ற **பேரின விடயங்களை ஆய்வு செய்வதில்லை.**

2. துறையிடைசார் அணுகுமுறை

நடத்தைவாதமானது துறையிடைசார் அணுகுமுறையாக காணப்படுகின்றது. நடத்தைவாதிகள் மனிதனின் அரசியல் நடத்தையை ஆய்வு செய்கின்ற போது அந்நடத்தையை பாதிக்கும் அரசியல் , பொருளாதார, சமூக காரணிகளையும் ஆராய்கின்றனர். இதனால் அரசியலுக்கும் பொருளாதாரம், சமூகவியல் , மானிடவியல் போன்ற துறைகளுக்குமிடையில் தொடர்பு வளர்ந்துள்ளது. இதுவே துறையிடைசார் அணுகுமுறையாகும்.

3. மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்டது

நடத்தைவாதமானது மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்டது. இது மனிதனுடைய அரசியல் நடத்தையை அதன் மீது பாதிப்பு செலுத்தும் காரணிகளை ஆராய்கின்றது. இவ்வாறு ஆராய்ந்து பெறப்படும் பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தை ஒழுங்கமைத்து அதனூடாக அரசியல் எதிர்வு கூறல்களை முன்வைக்கின்றது.

உதாரணம் : மனிதனின் தேர்தல் மற்றும் வாக்களிப்பு நடத்தை

4. சரியான நிலையில் உறுதிப்படுத்தும் விடயங்களை மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தல்

நடத்தைவாதமானது பரிசீலனை மற்றும் அவதானிப்புக்கள் மூலம் நிருபிக்கக்கூடிய அனுபவம்சார்ந்த காரணிகளை கொண்ட நிலைகளை மட்டும் கவனத்தில் கொள்கிறது

5. பெறுமதிசாரா கற்றையாக இருத்தல்

நடத்தைவாதம் பெறுமதிசாரா கற்கையாகும். இது விஞ்ஞான ரீதியான பரிசோதனையின் மூலம் நிருபிக்கக்கூடிய விடயங்களிலேயே கவனம் செலுத்துகின்றது.

6. புதிய நுட்பங்களை பயன்படுத்தல்.

நடத்தைவாதிகள் தரவுகளை சேகரிப்பதற்கும் விபரிப்பதற்கும் பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்துகின்றனர்.

உதாரணம் : நேர்முகப்பேட்டி, கள ஆய்வு , வினாக் கொத்து....

நன்மைகள்

- இவ்வனுகுமுறையால் அரசறிவியல் விஞ்ஞானமாக மாற்றமடைந்தது
- அரசறிவியலின் பாடப்பரப்பு விருத்தியடைந்தது
- பிரச்சினைகளை ஆய்வு செய்யும் கற்கை நெறியாக அரசறிவியல் மாறியது.
- இவ்வனுகுமுறை மூலம் மனிதனும், மனித குழுக்களும் முக்கியம் பெறுகின்றனர்.
- மனித நடத்தைகளை ஆராய்வதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாக்க உதவுதல்.

தீமைகள்

- மனித நடத்தையை பொதுமைப்படுத்த முடியாது
- மனிதர்களை இயந்திரமாக கருதுதல்
- அமேரிக்க சமூகத்தை அடிப்படையாக கொண்டுத
- அரசறிவியலாளர்ளை நடத்தைவாதிகள் , மரபுசார் வாதிகள் எனப் பிரிவுபடுத்தியமை.
- மனித நடத்தை மட்டும் முழு அரசியலையும் தீர்மானிக்காது.

அரசியல் பொருளாதார அணுகுமுறை

அரசறிவியலில் பயன்படுத்தப்படுகின்ற அணுகுமுறைகளுள் ஒன்றாக அரசியல் பொருளாதார அணுகுமுறை காணப்படுகின்றது. **பொருளாதார கட்டமைப்பினூடாக அரசியலை ஆய்வு செய்வதே** இதுவாகும். 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் அறிமுகமாகிய மாக்சிச கோடபாட்டோடு இவ்வனுகுமுறை முறையாக அரசறிவியலில் அறிமுகமாகியது. எனினும் 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் அடம்ஸ்மித் , டேவிட் ரிகாடோ, ஜோன் ஸ்டுவாட்மில் தோமஸ் மல்தஸ் போன்ற அறிஞர்களால் அரசியலுக்கும் பொருளாதாரத்திற்குமிடையிலான தொடர்பு வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும் அரசியலுக்கும் பொருளாரத்திற்கும் இடையிலான பலமான தொடர்பை வலியுறுத்தியவராக கால்மாக்ஸினை கூறமுடியும். இவர் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் எனும் கோட்பாட்டினூடாக பொருளாதாரத்தினால் அரசியலை தீர்மானிக்க முடியும் என்றார்.

இவ்வரலாற்றுப் பொருள் முதல்வாதமானது பொருளாதாரம், அரசியல் சமூக கலாசாரம் எனும் இரு பிரதான தளங்களைக் கொண்டுள்ளது. இது பொருள் உற்பத்தி , வர்த்தகம், தேசிய வருமானம் ஆகிய பொருளாதார செயன்முறைகள் அரசாங்கத்தின் கொள்கையோடு தொடர்புபடும் விதத்தையும் மறுபுறம் அரசாங்கக் கொள்கையானது பொருளாதார செயன் முறைகளில் ஏற்படும் தாக்கத்தையும் ஆராய்கின்றது.

அரசியல் பொருளாதார அணுகுமுறையின் பண்புகள்

- பொருளாதாரக்காரணிகயால் அரசியலை தீர்மானிக்கும் எனக்கூறுதல்
- அரசியல் பொருளாதார சமூக வர்க்கங்களின் கருவியாக காணப்படுதல்
- அரசியலின் அதிமுக்கிய கருத்தியல்களாக அதிகாரம் , இறைமை, வகுப்புவாதம், வர்க்க முரண்பாடுகள் என்பவற்றை ஏற்றல்
- வர்க்கபோராட்டமே அரசுக்கும் பொருளாதாரத்திற்கும் அடிப்படையாக அமைதல்
- சமூக பொருளாதார அரசியல் வளச்சிக்கு விமர்சன முடிவு அவசியமாதல்

நன்மைகள்

- அரசியலுக்கும் பொருளாதரத்திற்குமிடையிலான தொடர்பினை அறிய முடிதல்
- அரசியல் பொருளாதாரம் எனும் கற்கை நெறி தோற்றம் பெறல்
- அரசாங்கத்தில் பொருளாதாரம் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அறிய முடிதல்

தீமைகள்

- சமுதாய மக்களிடையே வகுப்புவாத முரண்பாடுகளை தோற்றுவித்தல்
- நாடுகளுக்கிடையில் பல முரண்பாடுகள் ஏற்பட பொருளாதரம் காரணமாகுதல்

சமூவியல் அணுகுமுறை

அரசறிவியல் கற்கையில் பயன்படுத்தப்படும் நவீன அணுகுமுறைகளுள் சமூகவியல் அணுகுமுறை விளங்குகின்றது. சமூகவியல் அணுகுமுறை என்பது சமூக நிறுவனங்களையும், தனிமனிதர்களையும் சமூக குழுக்களையும் முதன்மைப்படுத்தி ஆய்வு செய்யும் முறையாகும். சுருக்கங்கூறின் சமூகத்தளத்தினூடாக அரசியலினை ஆய்வு செய்யும் முறை எனலாம்.

ஆரம்பகாலத்தில் அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. எனினும் இது 19ம் நூற்றாண்டில் அமேரிக்க பல்கலைக்கழகத்தில் பிரிக்கப்பட்டு 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்விரண்டும் ஒன்றிலிருந்து மற்றையது பிரிந்து செயற்படலாயின. எனினும் இவ்விரண்டு துறைகளுக்கிடையிலான தொடர்புகளின் விளைவாக அரசியல் சமூகவியல் எனும் கற்கை நெறி தோற்றம் பெற்றுள்ளதுடன் இக்கற்றைநெறி பல்கலைக்கழகங்களில் அரசறிவியல் , சமூகவியல் துறையில் பயிலும் மானவர்களால் ஒரு பிரதான பாடமாக எடுக்கப்படுகின்றது.

சமூகவியல் அணுகுமுறையினை கையாண்ட அறிஞர்கள்

ஒகஸ்ட் கொம்டே

- கால்மாக்ஸ்
- மெக்ஸ்வெபர்
- லாஸ்வெல்
- மொண்டஸ்கியு

20ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியல் பென்க்பேர்ட் என்பவர் குழுவொன்றுடன் குருகுழ கல்வியை ஆராய்ந்து அரசறியிவியல் சமூகவியல் இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்றார். அரசறிவியலில் கற்கும் சில விவகாரங்கள் மற்றும் கருப்பொருட்கள் பற்றி சமூகம் தொடர்பான ஆழமான பரந்ததுமான அறிவைப் பெறவதறந்கு சமூகவியல் அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம் : அரசியல் கட்சிகள் தொடர்பான விடயங்கள்

இச்சமூகவியல் அணுகுமுறையானது தமது ஆய்வுகளில் நேரடி அவதானிப்பு , நேர்காணல், வினாக்கொத்துமாதிரி'. அளவையியல் நுட்பம் போன்ற ஆய்வு நுட்பங்களை பயன்படுத்துகின்றது.

இவ்வணுகுமுறை இரு துறைகளை அடிப்படையாகக் கொண்டு தனது ஆய்வை மேற்கொள்கின்றது.

1. சமூவியல்
2. மானிடவியல்

சமூவியல் அணுகுமுறையின் நன்மைகள்

- சமூகத்தின் அடிப்படையில் அரசறிவியலை விளங்கிக்கொள்ள உதவுகின்றது.
- மனிதன் , சமூகம், சமூக குழுக்கள் இதன் மூலம் முக்கியம் பெறுகின்றன.
- சமூகம் சார்ந்த நாட்டின் அரசியல் கலாச்சாரம் கட்டியெழுப்பட உதவுதல்
- அரசியல் சமூகவியல் கற்கைநெறி தோன்ற வழிசமைத்தல்

- சமுதாயத்தைப் பற்றிய ஆய்வுக்கான நுட்பமுறைகளை அரசியலில் அறிமுகப்படுத்தல்

தீமைகள்

- இவ்வணுகுமுறை சமூக அம்சங்களுக்கே அதிகம் முக்கியத்தும் கொடுக்கின்றது. அரசறிவியலோடு தொடர்பான ஏனைய விடயங்களே தவறிவிடுகின்றது
- இவ்வணுகுமுறை சில சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை சமூகங்களுக்கு சாதகமாக அமைந்து விடலாம். ஏனெனில் பெறும்பான்மை சமூகத்தின் நிறுவனங்களும் கருத்துக்களும் அந்நாட்டில் மேலோங்கிய நிலையில் காணப்படும்
- சில சமூக நிறுவனங்களும் குழுக்களும் தமது கொள்கைகளை மக்கள் மீது திணிக்க வைக்க இவ்வணுகுமுறையை ஒரு ஊடகமாக பணன்படுத்தலாம்

பெண்ணியல்வாத அணுகுமுறை

அரசறிவியல் கற்கையில் பயன்படுத்தப்படும் நவீன அணுகுமுறைகளுள் பெண்ணியல்வாத அணுகுமுறை முக்கியமானதாகும். பெண்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றவேண்டிய அவசியத்தினை முன்னிலைப்படுத்தி பெண்கள் அரசியலில் பங்குபற்றுதலை ஊக்குவிற்கும் நோக்கத்தோடு முன்வைக்கப்பட்ட அணுகுமுறையே இதுவாகும் இவ்வணுகுமுறை பெண்களுக்கும் அரசியலிற்குமிடையிலான தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு அரசறிவியலை ஆய்வு செய்ய முற்படுகின்றது. **அரசியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியவல்வாதம் கற்கைநெறி 1970 களில் மாற்றமடைந்தது**

இது பெண்களின் அரசியல் ஆற்றல்களையும் அரசியல் ஆளுமைகளையும் சமுதாயத்துக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு முன்வைக்கப்பட்டதாகும். இவ்வணுகுமுறை அரசியல் தொடர்பில் அதி முக்கிய வினாக்களை எழுப்பியதுடன் மடடுமன்றி **அரசியல் என்ற எண்ணக்கருவின் பொருளை விருத்தி செய்தது**.

பெண்ணியல்வாத அணுகுமுறையை முன்வைக்கின்ற ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்ற விடயங்கள்

- பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதனை தடுக்கின்ற காரணிகளை ஆய்வு செய்தல்
- பெண்களை மையப்படுத்தி அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெறாமை
- பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சமூக வன்முறைகள்
- பெண்களின் அரசியல் பங்கெற்பை உறுதிப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்படாமை
- பெண்களின் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு திட்டமும் முன்வைக்கப்படாமை
- பெண்களுடைய பொருளாதார அந்தஸ்த்துக்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைள் எதுவும் முன்வைக்கப்படாமை.

இவ்வாறு ஆய்வாளர்கள் பல விடயங்களே வலியுறுத்துகின்றனர். மேலும் பெண்ணியல்வாதிகள் அரசியல், சமூக ஆய்வுகளுக்கு பின்வரும் எண்ணக்கருக்களை சேர்த்துள்ளனர்

- பால்நிலை
- ஆண் -பெண் தொழிற்பிரிப்பு
- தந்தைவழித் தலைமைத்துவம்
- பெண் அடக்குமுறை
- ஆண்மையவாதம்
- ஆணாதிக்கம்
- பெண்விடுதலை

இவ்வணுகுமுறையினை கேத்மில்டன், கிறைமன் கிறீன், பாராசிமித், பிறீட்டி பிறைமன் ஆகியோர் கையாண்டிருந்தனர்

நன்மைகள்

- அரசியலில் பெண்கள் நிலை பற்றி அறிய முடிதல்
- இங்கு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றது
- பெண்களின் உரிமைகளை பாதுகாக்க உதவுதல்

தீமைகள்

- இது பெண்களின் உரிமைகளை பாதகாக்க முன்வைக்கப்பட்டாலும் பெண்களின் துன்ப நிலை இன்னும் சமூகத்தை விட்டு நீங்கவில்லை. அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.
- ஆணாதிக்கத்திற்கு எதிரானது
- பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் தொடர்ந்தும் பின் தங்கிய நிலையில் உள்ளது
- இயற்கையாகவே பெண்கள் மரபுகளுக்கும் வழக்காறுகளுக்கும் கட்டுப்படும் தன்மை காணப்படல்

உசாத்துணைகள்

- e – Thaksalawa learning content management System

www. e- Thaksalawa.moe.gov.lk

- சமூக விஞ்ஞான திணைக்களம் (2017) அரசறிவியல், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி. (12ம் தரம்). தேசிய கல்வி நிறுவகம், மகரகம - இலங்கை.
- பளீல் ஏ.சி.எம்(2017). அரசறிவியல் ஓர் அறிமுகம், கல்முனை வெளிவாரி பட்டப்படிப்பு கற்கை நிலையம்.

குறிப்புக்கள்…….